**செய்தி வெளியீடு எண்: 759** **நாள்:14.10.2020**

# செய்தி வெளியீடு

மக்களின் நல்வாழ்வில் மிகவும் முக்கியமான ஏற்றத்தாழ்வுகளின் பரிமாணங்களைப் புரிந்து கொள்வதற்கான சவால்கள் மற்றும் தடைகளை எவ்வாறு சமாளிப்பது என்பதை உள்ளடக்கி சமத்துவ சார்பு கொள்கைகளை எவ்வாறு செயல்படுத்துவது என்பது பற்றி விவாதிப்பதற்காக "**பொருளாதார வள உரிமைக்கான அணுகல் மற்றும் சமத்துவம் –சொத்து உரிமைகள், ஊதியங்கள் மற்றும் பரம்பரைச் சட்டங்கள்**"என்ற தலைப்பின் கீழ் சிறப்பு கருத்தரங்கம் 14.10.2020 அன்று, மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் துணைத் தலைவர், மாண்புமிகு திரு.சி. பொன்னையன் அவர்கள் தலைமையில் துறை சார் வல்லுநர்களின் பங்கேற்புடன் சென்னை, எழிலகத்தில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு காணொளி அரங்கில் நடைப்பெற்றது.

இக்கூட்டத்தில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் உறுப்பினர்–செயலர் திரு. அனில்மேஷ்ராம் இ.ஆ.ப., டாக்டர். என். வெங்கடாச்சலம், இ.ஆ.ப., வருவாய்த் துறை, உயர் அலுவலர்கள்– சமூக நலத் துறை, ஆதி திராவிடர் நலத் துறை, வேலைவாய்ப்பு (ம) பயிற்சித் துறை, தொழிலாளர் நலத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், டாக்டர் பிருந்தா பால்ராஜ், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் பல்கலை கழகம் மற்றும் கள வல்லுநர்கள் திரு. எம் விஜய பாஸ்கர், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம், மற்றும் திரு.சங்கரராமன் அமர் சேவா சங்கம் தொண்டு நிறுவனம் ஆகியோர் கலந்து கொண்டு மேற்படி கருப்பொருள்களின் மீதான கொள்கை நடவடிக்கைகள்,

செயல்படுத்தக்கூடிய பரிந்துரைகள், உரிய தீர்வுகள், பிற மாநிலங்களால் பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகள் போன்ற செயல்பாடுகள் ஆழமாக விவாதிக்கப்பட்டன.

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்கள் தனது தொடக்க உரையில் கீழ் காணும் திருக்குறளை ஒப்பிட்டு பேசினார்.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் }
சேரா தியல்வது நாடு } – பொருட்பால்

மிகுந்த பசி, நீங்காத நோய், அழிவு தரும் பகை இன்றி வாழும் உரிமை ஒவ்வொரு குடிமக்களுக்கும் உள்ளதென்றும் அதன்வழி தம் குடிமக்களைக் காத்தல் அரசின் கடமை என்றும் திருவள்ளுவர் கூறியதை மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் நிறைவேற்ற உறுதி கொண்டுள்ளார்,

அதன் வழியில் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்த தமிழ்நாடு தொலை நோக்குப் பார்வை 2023, உள்ளடக்கிய வளர்ச்சி அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பொருளாதார வளர்ச்சியின் மிகை விகிதத்துடன் தொலை நோக்குப் பார்வை 2023, குறைந்த வருமானம் கொண்ட மக்களுக்கு கணிசமான வளங்களை வழங்குவதன் மூலம் தமிழகம் வறுமையில்லாத மாநிலமாக இருப்பதை உறுதி செய்வதன் மூலம் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான முக்கியத்துவம் அளிக்கிறது.

அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியில், இந்தியாவின் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் விளங்குகிறது. 1994 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள

மக்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்துள்ளது. 2011–12 ஆம் ஆண்டின் படி வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் சதவீதம் கிராமப்புறங்களில் 15.83 சதவீதமும் நகர்ப்புறங்களில் 6.54 சதவீதம் மற்றும் மாநிலத்தின் ஒட்டுமொத்த சராசரிவீதம் 11.28 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

2017–18ஆம் ஆண்டின் படி மாவட்டவாரியான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்த வருமானம் கொண்ட மாவட்டங்களான பெரம்பலூர் (ரூ.4,13,354 இலட்சம்), அரியலூர் (ரூ.7,62,004 இலட்சம்), திருவாரூர் (ரூ.8,59,491 இலட்சம்) ஆகிய மாவட்டங்களின் வருமானம், உயர் வருமானம் கொண்ட மாவட்டங்களான திருவள்ளூர் (ரூ.1,03,28,268 இலட்சம்), சென்னை (ரூ.91,21,776 இலட்சம்) வருமானத்தில் பத்தில் ஒரு மடங்காக மட்டுமே உள்ளது. அதேபோல் குறைந்த தனி நபர் வருமானம் கொண்ட மாவட்டங்களான திருவாரூர் (ரூ.0.60 இலட்சம்) மற்றும் பெரம்பலூர் (ரூ.0.64 இலட்சம்) ஆகிய மாவட்டங்கள் அதிக தனிநபர் வருமானம் கொண்ட மாவட்டங்களின் தனி நபர் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவாகவே உள்ளது.

1990 முதல் 2017 வரையிலான காலக்கட்டத்தில் இந்திய மாநிலங்களுக்கான கல்வி, சுகாதாரம், வாழ்க்கைத் தரத்தின் மூன்று பரிமாணங்களின் சராசரி விகிதம், துணை தேசிய மனித மேம்பாட்டுக் குறியீட்டின் படி (Sub National Human Development Index – 2018) தமிழ்நாடு, கேரளா, அரியானா, இமாச்சலப் பிரதேசம் மற்றும் பஞ்சாப் போன்ற மாநிலங்கள் மனித மேம்பாட்டு குறியீட்டில் உயர்ந்த அளவில் உள்ளன. அவ்வறிக்கையின்படி 1990ஆம் ஆண்டில் 0.471 ஆக இருந்த தமிழகத்திற்கான மனித வள மேம்பாட்டுக் குறியீடு மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் அரசின் சீரிய

நடவடிக்கைகளால் 2018 ஆம் ஆண்டில் மனித மேம்பாடு குறியீடு 0.708 ஆக உயர்ந்துள்ளது.

ஆயினும் மாவட்ட அளவிலான மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டில் ஏற்றத் தாழ்வுடன் கன்னியாகுமரி மாவட்டம் மிக உயர்ந்த குறியீட்டுடன் (0.944) ஆகவும், அரியலூர் மாவட்டம் மிகக் குறைந்த குறியீட்டுடன் (0.282) காணப்படுகின்றது. பாலின விகிதத்திலும் மாவட்ட அளவில் வேறுபாடு காணப்படுகிறது.

தமிழ்நாட்டில் பல்வேறு மட்டங்களில் உள்ள சமனற்ற நிலையை குறைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பல்வேறு துறைகளின் கீழ் பல தரப்பட்ட மக்களின் நலன்களுக்காக பல சமூக பாதுகாப்பு / நலத் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறது. அவை மனித வளர்ச்சியில் நீண்டகாலத் தாக்கங்களை ஏற்படுத்தி வருகிறது. மக்களின் நல்வாழ்வுக்கு மிகவும் முக்கியமான சமத்துவமின்மைகளின் பரிமாணங்களைப் புரிந்துகொள்வது மற்றும் அனைவருக்குமான பொது சேவைகளை வழங்குவதில் உள்ளடக்கிய சார்பு கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான சவால்கள் மற்றும் தடைகளை எவ்வாறு சமாளிப்பது ஆகியவற்றை கண்டறிவது மிகவும் அவசியமாகிறது.

மாண்புமிகு துணைத் தலைவர் தனது நிறைவுரையில் நிதி ஆதாரத்திற்கு ஏற்ப அரசுத் துறைகள் செயல்படுகிறது என்பதை சுட்டிக்காட்டினார். நாம் தற்பொழுது மின்னணு காலத்தில் இருப்பதனால் இணைய வழி கல்வியை சிறந்த முறையில் பயண்படுத்த வேண்டும் என்று சுட்டிக்காட்டினார். ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் நபார்டு வங்கி ஆகியவை வேலையற்ற கிராமப்புற பெண்களுக்கு சுய தொழில் தொடங்க

கடன் உதவி வழங்க தயாராக உள்ளது. கடனை திரும்ப செலுத்தும் திறனை மேம்படுத்தும் பொருட்டு சுயதொழில் செய்யும் மக்களின் உற்பத்தி பொருட்களுக்கு சந்தை படுத்துதலை மேம்படுத்த வேண்டும். உழைக்கும் பெண்களுக்கு வாழ்வாதரம் மற்றும் பரம்பரை சொத்துரிமை சட்டங்கள் குறித்த விழிப்புணர்வு வேண்டும் என்று கூறினார். துணைத் தலைவர் குழந்தை மற்றும் இளம்பருவ தொழிலாளர்கள் (தடை மற்றும் ஒழுங்குமுறை சட்டம், 2016, 15.11.2019 அன்று மாநில விதிகளை திருத்துவதில் தமிழக அரசு முன்னோடியாக உள்ளது என்பதை எடுத்துரைத்தார். ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம ஊதியம் மாவட்டங்களில் நிலவும் பாகுபாட்டை மையமாகக் கொண்டு வலியுறுத்தப்பட்டது.

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத்தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்கள் தமிழ்நாடு அரசு கொள்கை சார்ந்த முடிவுகள் எடுப்பதற்காக மேற்கண்ட கருத்தரங்கத்தில் விவாதிக்கப்பட்ட ஆலோசனைகள், கருத்துகள் மற்றும் முடிவுகள் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர்களின் கனிவான பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்தார். கருத்தரங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

உறுப்பினர்–செயலர்

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**